# அயன்மேன் 70.3 கலம்போ ட்ரைஅத்லன் 700க்கும் மேற்பட்ட போட்டியாளர்கள்

(நெவில் அன்தனி)

கொழும்பில் இம் மாதம் 24ஆம் திகதி நடைபெறவுள்ள இரண்டாவது சோ ஸ்ரீலங்கா அயன்மேன் 70.3 ட்ரைஅத்லன் (மூன்று அம்ச போட்டி நிகழ்ச்சி) போட்டியில் 700க்கும் மேற்பட்ட போட்டியாளர்கள் பங்குபற்றவுள்ளனர்.

வெளிநாட்டவர்களுக்கு ஒரு சிறந்த சுற்றுலாத்துறை மையமாக இலங்கை விளங்குகின்றது என்பதை மீண்டும் உலகுக்கு உணர்த்தும் வகையில் இப் போட்டி நடத்தப்படுகின்றது.

இந்த நிகழ்ச்சியில் பங்குபற்ற வருகைதரும் வெளிநாட்டவர்களின் மூலம் இலங்கைக்கு சுமார் 72 கோடி ரூபா அந்நியச் செலாவணியாக கிடைக்கும் என போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

1.9 கிலோ மீற்றர் தூர கடல் நீச்சல், 90 கிலோ மீற்றர் தூர சைக்கிளோட்டம், 21.1 கிலோ மீற்றர் தூர ஓட்டம் ஆகிய மூன்று நிகழ்ச்சிகளைக் கொண்ட சோ ஸ்ரீலங்கா அயன்மேன் 70.3 ட்ரைஅத்லன் போட்டி நிகழ்ச்சியில் 56 நாடுகளைச் சேர்ந்த 700க்கும் மேற்பட்ட போட்டியாளர்கள் பங்குபற்றவுள்ளனர்.




கொழும்பு காலிமுக கடற்பகுதியில் 1.9 கிலோ மீற்றர் நீச்சல் போட்டியுடன் அயன்மேன் 70.3 கலம்போ போட்டி காலையில் ஆரம்பமாகும், தொடர்ந்து 90 கிலோ மீற்றர் தூர சைக்கிளோட்டப் போட்டியும் கடைசியாக 21.1 கிலோ மீற்றர் தூர ஓட்டப் போட்டியும் நடைபெறும்.

இதற்கான பிரதான அனுசரணையை இலங்கை சுற்றுலாத்துறை ஊக்குவிப்பு பணியகமும் உப அனுசரணையை ப்ரோ அம் செரெண்டிப் நிறுவனமும் வழங்குகின்றன.

சோ ஸ்ரீலங்கா அயன்மேன் 70.3 கலம்போ ட்ரைஅத்லன் போட்டி தொடர்பாக அண்மையில் நடத்தப்பட்ட ஊடக சந்திப்பில் பேசிய சுற்றுலாத்துறை ஊக்குவிப்பு, வனஜீவராசிகள் மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சர் ஜோன் அமரதுங்க, இத்தகைய போட்டி நிகழ்ச்சியானது இலங்கையின் சுற்றுலாத்துறையை ஊக்குவிக்க வழிவகுப்பதாகத் தெரிவித்தார். அத்துடன் இன்னும் நான்கு பிரதான நிகழ்ச்சிகளை நடத்தவுள்ளதாகவும் அவர் கூறினார்.

சோ ஸ்ரீலங்கா அயன்மேன் 70.3 ட்ரைஅத்லன் போட்டிப் பணிப்பாளரும் ப்ரோ அம் செரெண்டிப் நிறுவனப் பணிப்பாளருமான ராஜன் தனநாயகம் பேசுகையில்,

''அயன்மேன் கலம்போ நிகழ்ச்சியை கடந்த வருடம் வெற்றிகரமாக நடத்தியதன் மூலம் வெளிநாட்டவர்களின் பாராட்டைப் பெற்றோம். அரச மற்றும் தனியார் நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் இவ் வருடமும் இப் போட்டி நிகழ்ச்சியை அதைவிட வெற்றிகரமாக நடத்த முடியும் என நம்புகின்றேன். இலங்கையில் மறக்க முடியாத அனுபவங்களை வெளிநாட்டு போட்டியாளர்கள் பெறும் வகையில் அயன்மேன் கலம்போ நிகழ்ச்சி அமையும்'' என்றார்.